NOOLAHAM FOUNDATION

# நூலக நிறுவனம்

## மாதாந்த அறிக்கை – மார்ச் 2016

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 மார்ச் மாதச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 478 | 15478 |
| கையெழுத்துப் பிரதி | 10 | 403 |
| தரமேம்படுத்தல்கள் | 7 | 514 |
| மொத்த ஆவணங்கள் | 495 | 16395 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 456 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 07 தரமேம்படுத்தல் ஆவணங்கள் வலைத்தளத்தில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. மிகுதி ஆவணங்கள் சித்திரை மாதத்தின் முதல் வாரத்தில் பதிவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
- இம்மாதம் 490 ஆவணங்களிற்கு நிர்வாக விபரத் தரவுகள் இணைக்கப்பட்டுள்ளன.
- தேடலினை இலகுபடுத்துவதற்காக சஞ்சிகைகள் பத்திரிகைகளுக்கு உள்ளடக்கம் இணைக்கும் பணியில் 9 ஆவணங்களிற்கு இம்மாதம் இணைக்கப்பட்டது. நூலகத்தால் முன்னெடுக்கப்பட்ட OCR செயற்றிட்டம் வெற்றியளிக்கும் நிலையினை எட்டியமையால் உள்ளடக்கம் தட்டச்சு செய்யும் பணி மார்ச் 15 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.
- இதழியல் தேடலினை இலகுபடுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் இம்மாதம் 37 ஆவணங்களிற்கான குறிப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- திரு. கோப்பாய் சிவம் அவர்களின் சேகரிப்பில் இருந்த 1911ஆம் ஆண்டு வெளிவந்த நகுலேச்சர விநோத விசித்திர கவிப்பூங்கொத்து என்ற நூல் அடங்கலாக 1980ற்கு முன்னர் வெளியான சில நூல்களும் ஆவணப்படுத்த வழங்கியிருந்தார்.
- திரு கலாமணி பரணீதரன் அவர்களும் தனது சேகரிப்பிலிருந்து ஆசிரியர் செங்கை ஆழியான் அவர்களின் 20 படைப்புக்களையும் வழங்கியிருந்தார்.
- பேராசிரியர் சிவச்சந்திரன் அவர்கள் தனது சேகரிப்பில் இருந்த 1989இல் இருந்து வெளியாகும் நங்கை இதழ்களின் 17 வெளியீடுகளை ஆவணப்படுத்த வழங்கியிருந்தார்.
- வைத்திய கலாநிதி அம்பிகாபதி பரமேஸ்வர ஐயர் அவர்கள் பிரித்தானியாவிலிருந்து தனது அரிய சேகரிப்புக்களை ஆவணவாக்கலுக்காக வழங்கியிருந்தார்.
- திரு சுந்தரேஸ்வரன் அவர்கள் தனது சேகரிப்பில் இருந்த 41கலைச் செல்வி இதழ்களை ஆவணப்படுத்த வழங்கியிருந்தார்.
- சு.குமாரசாமி அவர்களின் சேகரிப்பிலிருந்த 1998 காலப்பகுதியில் வெளிவந்த 06சூரிய காந்தி பத்திரிகைகளும் தெணியான், பேராசிரியர் இரகுநாதன், அச்சுதபாகன், ஆகியோர்களும் தங்களது எழுத்தாவணங்களையும், சேகரிப்பிலிருந்த பல ஆவணங்களையும் ஆவணப்படுத்த வழங்கியிருந்தனர்.
- மேலும் வேறு பலரும் சிறிய எண்ணிக்கையில் ஆவணங்களை வழங்கினர்.

தங்களது வெளியீடுகள் சேகரிப்புக்களை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். இவர்கள் வழங்கிய ஆவணங்கள் அடுத்து வரும் மாதங்களில் பகுதி பகுதியாக ஆவணப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

மார்ச் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவு செய்துள்ளனர்.

**எழுத்தாளார்கள்**:

01. எம்.செல்வதாஸ்
02. ச.திருச்செந்தூரன்க
03. கை.திலகநாதன்
04. இ.தங்கவேல்
05. குந்தவை
06. ம.ஆனந்தநடராஜன்
07. பே.கனகரட்ணம்
08. நி.தசீதரன்

09. அ.சண்முகதாஸ்
10. மனோன்மணி சண்முகதாஸ்
11. ஆ.சிவராசா
12. ப.ஜெயகொடி
13. ஞா.திருக்கேதீஸ்வரன்
14. இ.விஜிதா
15. ச.பிரேமினி
16. கே.ஆர்.டேவிட்
17. ந.குகபரன்
18. துரைமனோகரன்
19. ஞா.புலேந்திரன்
20. ச.வரதராஜா
21. சு.குமாரசாமி
22. அ.சாந்தினி
23. ம.இரகுநாதன்
24. சு.வேலுப்பிள்ளை
25. இ.அச்சுதபாகன்
26. நா.சண்முகலிங்கன்
27. நா.தங்கவேல்
28. த.சிவானந்தன்
29. நிலா தமிழிந்தாசன்

**வெளியீட்டாளர்கள்**:

01. சிவபூமி
02. ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானம்
03. பான் நியூஸ்
04. அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
05. தேடல் வெளியீட்டகம்
06. வரதர் வெளியீடு
07. மில்க்வைற் தொழிலகம்

**வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்**

- வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் இம்மாதம் 139 ஆளுமைகள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டதுடன் 314 ஆளுமைகளில் மேலதிக தகவல்களும் இணைக்கப்பட்டன.
- நூலக வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களிலிருந்து இலங்கை தமிழ்பேசும் சமூகம் சார்பில் வெளியாகிய ஆளுமை, வாழ்க்கை வரலாறு வெளியீடுகளிற்கான நூல்விபரப்பட்டியல் தயாரிக்கப்பட்டு 58வெளியீடுகள் இம்மாதம் பட்டியலிடப்பட்டுள்ளது. இவை வாழ்க்கை வரலாற்று ஆவணவாக்கம் தொடர்பான எதிர்காலச் செயற்றிட்டங்களில் பயன்படுத்தப்படவுள்ளன.

**ஆளணி (Human Resource)**

நூலக நிறுவனப் பணியாளர்களிற்கிடையிலான கலந்துரையாடல் வாராந்தம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இம்மாதம் முதல் இடம்பெற்றுவருகின்றது. இக்கலந்துரையாடலில் எண்ணிமநூலக பணி ஒழுங்குகள், பணிக்கான காலங்கள், அடைவுகள், சிக்கல்கள் பற்றி உரையாடப்படுகின்றது.

**வரவு செலவு அறிக்கை (Financial Report)**

- மார்ச் மாதத் தேவைகளுக்காக ரூ. 271,781.78 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 200,700, உபகரணச் செலவுகள், வாடகை, ஏனைய செலவுகள் 71,081.78 ஆகியன உள்ளடங்குகின்றன.
- மார்ச் மாதம் இலங்கையில் இருந்து 3000 ரூபா நன்கொடையாக கிடைக்கப்பெற்றது. பெப்ரவரி மாத மிகுதியும் ஏப்ரல் முதல் வாரத்தில் கிடைக்கப்பெற்ற கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்க கொடையாளர்களின் நன்கொடையிலேயே மார்ச் மாத செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. கனடாவிலிருந்து ரூபா 54,880 உம் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து 14,500 ரூபாவும் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.